c

# கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

# Kokuvil Hindu College Old Students Association - Canada

## கல்விசார் போட்டி – Educational Contest

## ஆண்டு 2020

## பேச்சு

## Speech

### 12 வயதுக்குட்பட்டோர்

## விபுலாநந்த அடிகள்

ஈழம் தந்த மூத்த தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள். அவர் தமிழ் உலகம் கண்ட பேரறிஞர். அரும்பெரும் அறிஞர். தமிழ் மொழிக்கு அளப்பரிய பணிகள் புரிந்தவர். தமிழ்ச் சிறுவர்களின் வளர்ச்சிக்குப் பயன் தரும் பணிகள் செய்தவர். ஆசிரியர், கல்லூரி முதல்வர், பத்திரிகை ஆசிரியர் முதலிய பொறுப்புக்களை வகித்ததுடன் நூலாசிரியராகவும் விளங்கியவர்.

இவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் உள்ள காரைதீவுக் கிராமத்தில் பிறந்தவர். இவரது இயற்பெயர் மயில்வாகனன் ஆகும். இளமையிலேயே தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றார். உயர் கல்வியை மட்டக்களப்பில் உள்ள புனித மைக்கேல் கல்லூரியில் பயின்றார். மேலும் லண்டன் பல்கலைக்கழகத்தில் பயின்று அறிவியற்துறைப் பட்டதாரி ஆனார்.

இவர் யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமை ஆற்றினார். இவரது உள்ளம் துறவு வாழ்வை நாடியது. இவரது துறவுப்பெயரே சுவாமி விபுலானந்தர் ஆகும். தமிழ் மொழியையும், இறைநெறியையும் வளர்க்கப் பல பள்ளிகளை அமைத்தார்.

இவரின் ஆராய்ச்சித் திறனின் பயனாக ஆங்கிலவாணி, யாழ்நூல், மதங்கசூளாமணி ஆகிய நூல்கள் உருவாகின. தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளுள் முதன்மையானது அவர் எழுதிய ‘‘யாழ்நூல்’’ ஆகும். இவரது கல்வித் திறமையால் ‘‘தமிழ்நாட்டின் முதலாவது தமிழ்ப்பேராசிரியர்’’ எனும் சிறப்பினையும் பெற்றர். காரைதீவில் உள்ள சாரதா வித்தியாலயம், திருகோணமலை இந்துக் கல்லூரி ஆகியன இவரால் நிறுவப்பட்டவையே.

தமிழ்மொழிக்கும், சமயத்திற்கும் தொண்டாற்றிய அடிகளார் இறைவனிடத்து அளவற்ற பக்தி கொண்டவர். சிறுவர்களாகிய நாம் இவரையும், இவர்போன்ற தமிழ்ப் பெரியார்களையும் மனதில் நிறுத்திப் போற்றுவோம்.

குறிப்பு: பின்வரும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் …….

**மனனம்** - 40 புள்ளிகள், **உச்சரிப்பு** – 20, நிற்கும் நிலை - 30 புள்ளிகள், **தொனி** - 20 புள்ளிகள்